**வாக்குமூலம்**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை**

**வழக்கு எண். SC.No.72/2015**

**வழக்கு சாட்சி: PW.17**

**தேதி: 05.12.2024**

**பெயர்: முத்துப்பாண்டி** **ஜாதி:**
**தந்தை பெயர் :** **தொழில்:**
**கிராமம்:** **சமயம்:**
**தாலுகா:** **வயது:**

**சாட்சி ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு முதல் விசாரணை:**

நான் தற்சமயம் திருக்கோஷ்டியூர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 20.02.2013ம் தேதி சிவகங்கை தாலுகா காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்தேன். சிவகங்கை தாலுகா காவல் நிலைய குற்ற எண்: 120/2013 வழக்கில் 20.02.2013ம் தேதி காலை 08.35 மணிக்கு பனங்காடி to காட்டுச்சூரை செல்லும் வழியில் மாணிக்கம் என்பவரது பாலடைந்த கிணற்றில் கிடந்த அடையாளம் தெரியாத மனித எலும்பு துண்டுகளை சிவகங்கை வட்டாட்சியர் மற்றும் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் ஆய்வாளர் கைப்பற்றினார். அவற்றை டி.என்.ஏ பகுப்பாய்வு செய்வதற்காக மருத்துவருக்கு கடிதம் கொடுத்து பத்திரப்படுத்த அனுப்பி வைத்தார். அதன்படி சிவகங்கை அரசு மருத்துவமனை சென்று மருத்துவரிடம் கடிதத்தை கொடுத்து அந்த எலும்பை பாதுகாப்பாக வைக்க ஒப்படைத்தேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை: இல்லை.

**வாக்குமூலம்**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை**

**வழக்கு எண். SC.No.72/2015**

**வழக்கு சாட்சி: PW.18**

**தேதி: 05.12.2024**

| | | |
|---|---|---|
| **பெயர்:** | **லிங்கத்துரை** | **ஜாதி:** |
| **தந்தை பெயர் :** | | **தொழில்:** |
| **கிராமம்:** | | **சமயம்:** |
| **தாலுகா:** | | **வயது:** |

**சாட்சி ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு முதல் விசாரணை:**

நான் தற்சமயம் இளையான்குடி காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 10.07.2013ம் தேதி சிவகங்கை தாலுகா காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வந்தேன். அன்று மாலை 06.30 மணியளவில் மேற்படி காவல் நிலைய குற்ற எண்: 120/2013 வழக்கு சம்பந்தமாக இறந்து போன நபரது எலும்பு துண்டுகளை சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இருந்து மரப்பெட்டி ஒன்றில் பெற்று சிவகங்கை நீதித்துறை நடுவர் எண்: 2 உத்தரவுபடி சென்னை மயிலாப்பூரிலுள்ள தடய அறிவியல் ஆய்வகத்தில் 11.07.2013ம் தேதி ஒப்படைத்தேன். இந்த வழக்கு சம்பந்தமாக என்னை ஆய்வாளர் என்னை விசாரிக்க நடந்த விபரங்களை கூறினேன்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: இல்லை.